# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. NO.60/2016

**16.03.2023 - வா.சா. 2 சித்ரா சத்திய பிரமாணத்தின் பேரில் 7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி என்னுடைய அக்காள் மகள். என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். வாதி சொல்லித்தான் மேற்சொன்ன விவரங்கள் தட்டச்சு செய்து போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதி பாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு சொத்துக்கள் ஒரு சில சொத்துக்கள் தெரியும். மற்ற சொத்துக்கள் பற்றி எனக்கு தெரியாது. மல்லவாடியில் சில சொத்துக்கள் உள்ளன. 5, 6 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் செல்லாது என்று நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. ஆனால் வாதி அந்த கிரைய ஆவணங்கள் செல்லாது என்று குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் குடியிருப்பது மூங்கில்துரைப்பட்டு. வாதி செஞ்சியில் குடியிருக்கிறார். எங்கள் இருவருக்கும் மூலம் சுமார் 80 கி.மீட்டர் இருக்கலாம். வாதி சொல்லித்தான் வாதிக்கும், அவரது மாமனாருக்கும், கணவருக்கு ஏற்பட்ட பிரச்சனை பற்றி தெரியும். தாவா 2 மற்றும் 3 யார் பெயரில் பட்டா உள்ளது என்று எனக்கு தெரியாது. வாதியின் கணவர் இறப்பதற்கு முன்பே சில சொத்துக்களை வாதியின் தகப்பனார் சிலருக்கு எழுதி வைத்தார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. திருமணத்தின் போது வாதியின் கணவர் உடல் ஆரோக்கியத்துடன் இருந்தார். திருமணமாகி வாதியும், அவரது கணவரும் சுமார் 3 ஆண்டுகள் ஒன்றாக இருந்தனர். அதன் பிறகு கருத்து வேறுபாடு ஏற்பட்டு வாதி தாய் வீட்டிற்கு வந்து விட்டார். அதன் பிறகு வாதியின் கணவர் 2016 வரை உயிருடன் இருந்தார். அதன் பிறகு அவர் வாதியின் கணவரை பார்க்கவில்லை என்றால் அவர்கள் விடவும் இல்லை, அவர் பார்க்கவுமில்லை. 1ம் பிரதிவாதியோ, அல்லது 4ம் பிரதிவாதியோ சண்டை போடவில்லை என்றும், பணிவிடை செய்ய முடியாததால் தான் வாதி தன் தாய் வீட்டிற்கு வந்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. செஞ்சி நீதிமன்றத்தில் ஒரு வழக்கு போட்டிருந்த விவரம் எனக்கு தெரியாது. 1, 4 பிரதிவாதிகள் வாழவிடாமல் தடுத்தது சம்மந்தமாக வாதி குடும்ப நல நீதிமன்றத்தில் சேர்ந்து வாழ வழக்கு போட்டார்கள் என்றால் அதனைபற்றி எனக்கு தெரியாது. கணவர் இறந்த பிறகும் கெட்ட எண்ணத்தில் சொத்தை வாங்க

வேண்டும் என்று இந்த வழக்கை வாதி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. வாதி குடும்பத்தில் என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றும், வழக்கு விவரங்கள் தெரியாமல் வாதி என் அக்கா மகள் என்பதற்காக அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/- சித்ரா

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.